RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s22222

OPEN ACCESS

# பண்டைய இலக்கியத்தில் வழிபாட்டு நம்பிக்கைகள்

மா. கலைவாணி [அ, *], வே.அ. பழனியப்பன் [அ]

[அ] தமிழ்த்துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றது), மேலைச்சிவபுரி-622403, தமிழ்நாடு, இந்தியா

# Cult Beliefs in Ancient Literature

M. Kalaivani [a, *] V.A. Palaniappan [a]

[a] Department of Tamil, Ganesar Arts and Science College, Melaisivapuri-622403, Tamil Nadu, India

* Corresponding Author: duraikalai86@gmail.com

Received: 28.09.2022
Revised: 10-11-2022
Accepted: 16-11-2022
Published: 01-12-2022

Check for updates

## ABSTRACT

Worship began when human beings started to believe that there was a power that is higher than themselves and began to bow before that power. Humans began to think what is the reason for the sufferings that happen to mankind during the time when he lived in forests, mountains, with animals and nature? The calamities caused by nature and the suffering and loss due to animals are immense. To protect themselves from these sufferings and losses, they worshiped the nature and other things as their deities. They believed that those natural calamities had more fighting power than them. When the people who lived as ethnic groups eventually became families, the way they worshiped the deity changed and they were transformed into rituals. It is impossible to say exactly when these rituals appeared. Over time people used to pray to the deity to make their lives successful and to be successful in their endeavours. For that, they offered some kind of sacrifices to the goddess. Beliefs and worships of gods that were prevalent among the ancient Tamils are explained on the basis of Sangam literature.

**Keywords:** Ancient Literature, Worship, Forests, Mountains, Animals, Nature

## முன்னுரை

மனிதன் தன் வாழ்வில் பார்த்தது, கேட்டது அனுபவத்தால் உணர்ந்து கொண்டது ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சில நிகழ்வுகளைத் தோற்றுவிக்கின்றான். அந்நிகழ்வுகள் சமூகத்தில் அங்கீகரிக்கப்படும்போது அல்லது பலரால் பின்பற்றப்படும்போது அவை மக்களிடையே நம்பிக்கையாக வளர்கின்றன நம்பிக்கைகள் பெரும்பாலும் மனிதனின் அச்ச உணர்வினை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவையாகவே காட்சி தருகின்றன. இயற்கையில் புதிரான செயல்களை உணர இயலாதபோதும், மனித வாழ்வில் நிகழும் ஊறுகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத நிலையிலும் மனிதமனம் சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. பின்னர் நம்பிக்கைகளாக உருபெறுகின்றன. சமுதாயச் சடங்குகளே நம்பிக்கையாகக் காலப்போக்கில் மாறுகின்றன. மனிதன் இன்ப துன்பத்திலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளவே நம்பிக்கைகளை உருவாக்குகின்றான். இந்த நம்பிக்கைகள் காலங்காலமாக ஒரு தலைமுறையில் இருந்து மற்றொரு தலைமுறைக்கு மாறுகின்றன. பண்பாட்டிலும், அறிவிலும் சிறந்து விளங்கிய சங்ககாலச் சமுதாயத்தில் பல வகையான நம்பிக்கைகள் இருந்ததைக் காண்போம்.

## நிமித்தங்கள்

நிமித்ததம் என்பது சில குறியீடுகளின் வாயிலாக எதிர்காலத்தில் நடப்பதை முன் கூட்டித் தெரிந்து கொள்வதாகும்.

"நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்"

தன்னும் அவனும் அவனுஞ் சுட்டி

மன்னும் நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்

நன்மை தீமை அச்சஞ் சார்தலென்று

அன்ன மறவும் (Ilampuranar, 2008)

இவ்வாறு நிமித்தம் பார்த்தலைத் தொல்காப்பியம் சுட்டுகிறது. குறுந்தொகை (140) இதுபற்றிக் கூறுகிறது. அகநானூறு (20), புறநானூறு (124) ஆகிய நூல்களில் பறவைச் சகுனம் பார்ப்பது தமிழர்களின் பழக்கம் என்பது இடம்பெற்றுள்ளது (Jeyabal, 2017; Balasubramaniyan, 2017).

"நான் அன்று போகிப், புள்இடை தட்பப்

பதன் அன்று புக்குத் திறன் அன்று மொழியினும்" (Balasubramaniyan, 2017).

## பல்லி குறிசொல்லுதல்

ஒரு செயலுக்காகப் புறப்படும்போது பல்லி கத்தினால் சில நேரங்களில் நல்ல சகுனம் என்றும், சில நேரங்களில் தீய சகுனம் என்றும் கூறும் பழக்கம் இருந்திருக்கிறது (அகம்.88, 151, கலி.11).

### எரி நட்சத்திரம்

வானத்திலிருந்து பெரிய நட்சத்திரம் எரிந்து வீழ்ந்தால் கெட்டது நடக்கும் என்று நம்பிக்கை நிலவியது. குறிப்பாக அரசுக்குக் கேடு என்பதைப் புறநானூற்றுப் பாடல் விளக்குகிறது.

"கனை எரி பரப்பக் பால் எதிர்பு பொங்கி

ஒருமீன் விழுந்தன்றால் விசும்பினானே

அஞ்சினம், எழுநாள் வந்தன்று இன்றே" (Balasubramaniyan, 2017)

## ஆழியிழைத்தல்

பிரிந்த தலைவனை எதிர்நோக்கிக் காத்திருக்கும் தலைவி தனக்குத்தானே குறிபார்ப்பது ஆழியிழைத்தல் எனப்பட்டது. ஒரு வட்டத்தை வரைந்து அதை ஒற்றையா இரட்டையா என்று எண்ணுவதாகும் (குறு.358), அகம்351, கலி.142).

### விரிச்சி கேட்டல்

ஒரு செயலைத் தொடங்கும் முன்னர் பிறர் கூறும் சொற்களைக் கவனித்துத் தான் மேற்கொள்ளும் செயலின் நன்மை தீமைய அறியும் வழக்கம் சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது. இதையே நற்சொல் கேட்டல் என்று கூறுவர் (Mohan, 2017), நற்.40, முல்லை.6-11, 15-22, 8-11, புறம். 280

### கனவு

மனதில் ஆழப்பதிந்துள்ள நினைவுகள் நாம் உறங்கும்போது வெளிவரும். இதையே கனவு என்பர். அதிகாலையில் காணும் கனவு பலிக்கும் என்பது பண்டைத் தமிழர்களின் நம்பிக்கை. இது பற்றிய செய்திகள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன

## கண்துடித்தல்

கண் இமை துடிப்பது கண்டு நன்மை, தீமை நடக்கும் என்று பண்டைத்தமிழர் நம்பினர் மகளிர்க்கு இடக்கண் துடித்தால் நன்மையும், வலக்கண் துடித்தால் தீமையும் உண்டாகும் என்பது மக்களின் நம்பிக்கை கலி11, கலி.101.

"மனைவயின் பல்லியும் பாங்கொத்து இசைத்தன்ன

நல்லிதழ் உன்கண் ஆடுமால் இடனே" (கலி.11:21-22)

தமிழர்கள் சகுனம் பார்த்தல், விரிச்சிக்கேட்டல், வழிபாடு நடத்துதல் ஆகிய செயல்களில் தம்மை இணைத்துக் கொண்டனர். வாழ்வு வளம்பெற வேண்டும் என்பதற்காகவும், எடுத்த செயல் வெற்றியுடன் முடிதல் வேண்டியும் மேற்கண்ட செயல்களைச் செய்தனர்.

## நடுகல் வழிபாடு

வீரராக இறந்தோர்க்குக் கல் நடும் வழக்கம் அன்றைய நாளில் இருந்தது. அது 'நடுகல்' என வழங்கப்பட்டது. சமுதாயம் இனக்குழுக்களாக இருந்தபோது சமூகத்தைக் காக்க வேண்டி, மக்களுக்காக எதிரிகளிடம் போர் செய்து, அப்போரிலே இறந்த வீரர்களுக்கு, அவர்களின் நினைவாக எழுப்பப்பட்டது 'நடுகல்'. இது பின்னர் வழிபாட்டுத் தலமாக மாறியது. "பண்டைத் தமிழருடைய போர்ச் சடங்குகளில் நடுகல்லும் ஒன்று" (Subramaniyan, 1986). நடுகல் நட்டு வணங்கும் வழக்கம் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே வழக்கினில் இருந்துள்ளது.

"காட்சி, கால்கோள் நீர்ப்படை, நடுகல்

சீர்தரு சிறப்பின் பெரும்படை வாழ்த்தல் என்று

இருமூன்று வகையின் கல்லொடு புணர" (Ilampuranar, 2008)

'நடுகல்' நடுவது ஒரு சடங்காகவே நிகழ்த்தப்பட்டுள்ளது. கல்லை தேருதல், நல்லநேரம் குறித்தல், கல் நீராட்டு, கல்லை நிறுவுதல், கொண்டாட்டம், விருந்து, வாழ்த்து, வழிபாடு எனப் பல நிலைகள் காணப்படுகின்றன.

"நல்அமர்க் கடந்த நாணுடை மறவர்

பெயரும் பீடும் எழுதி, அதர்தொறும்

பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகன்" (அகம்.67:8-10)

நடுகல்லில் வீரர்களின் பெயரும், பெருமையும் பொறித்து அவற்றிற்கு மயிற்பீலி சூட்டி வணங்கியதை அகநானூறு எடுத்துக்காட்டுகிறது. வீரர்களுக்கு கல் நட்டு அமைத்திருக்கலாம். "நால்வகை நிலத்துத் தெய்வங்கள் கூட அந்நிலத்து மக்களுக்குத் துணை செய்த வீரர்களின் தலைவர்களாக இருக்கலாம். வீரர் வணக்கத்திலிருந்து தெய்வ வணக்கம் பிறந்தது என்று சொல்வதற்குக் கூட இடம் உண்டு". தெய்வ நம்பிக்கை வந்த பிறகே மனிதன் நன்மை, தீமைகளை பகுத்து அறிய முற்பட்டுள்ளான் கட்டுப்பாட்டுடன் நடக்கத் தொடங்கியுள்ளான். அன்பும் அறிவும் பெற்றுக் கூட்டுறவு வாழ்வு வாழத் தொடங்கினான். "போர்க்களத்தில் இறந்த வீரனுக்கு எடுக்கப்பட்ட நினைவுக் குறியீடு நடுகல் ஆகும். தொடக்கக் காலத்தில் வீரனைச் சிறப்பிக்கும் நோக்கம் கொண்டு அமைந்த நடுகல் பின்னர் அதனைத் தெய்வமாக்கி வழிபடும் நிலைக்கு உயர்ந்தது" சங்க காலத்தில் நடுகல் நட்டு வீரர்களைப் பெருமைபடுத்திய நிகழ்வும், வழிபட்ட நிகழ்வும் காணப்படுகின்றன. நடுகற்கள் ஊருக்குப் புறத்தே தொலைவில் இருந்த திடல்களில் நடப்பட்டன. ஓங்கி வளர்ந்த வேங்கையின் வெள்ளிய பனந்தோட்டோடு விரவித் தொடுத்து மாலையாகச் சூட்டிக் கோவலர் ஒரு வீரனுக்குக் கல் நட்டதைப் புறநானூறு கூறுகிறது.

"ஊர்நனி யிறந்த பார்முதிர் பறந்தலை

ஓங்குநிலை வேங்கை ஒள்ளினர் நறுவீப்

பல்லான் கோவலர் படலைச் சூட்டக்

கல்லா யினையே நடுமான் தேறல்” (புறம்.265:1-5)

“பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி

மரல் வகுத்துத் தொடுத்த செம்பூங் கண்ணியொடு

அணிமயிற் பீலி சூட்டிப் பெயர் பொறித்து

இனி நட்டனரே கல்லும்” (புறம்.264:1-4)

“விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்

எழுத்துடை நடுகல்” ஐங்.352:1-2,

“கிடுகு நிரைத்து எஃகூன்றி

நடுகல்லின் அரண் போல” (பட்டின.78-79)

இவை தவிர அகம் 131, 387, புறம்260 ஆகிய பாடல்களிலும் நடுகல் பற்றிய செய்திகள் வந்துள்ளன. “சங்கச் செய்யுட்களில் காணப்படும் நடுகல் பற்றிய குறிப்புகளில் பல வெட்சித் திணையின் தொடர்புடையவனவாககே உள்ளன. ஆநிரை மீட்டு அம்முயற்சியில் உயிர் துறந்த வீரர்களே பாராட்டப்பட்டுள்ளனர்”. “வீரக் கற்கள் இறந்த வீரர்தம் சுற்றத்தாரால், அவர்மீது அக்கறை கொண்டோரால் இறந்தோரின் மதிப்பை மறக்காமல் பேணும் கருத்துடன் நிறுவப்பட்டிருக்கின்றன”.

“நடுகல் பீலி சூட்டித் துடிப்படுத்துத்

தோப்பிக் கள்ளொடு துரூஉப்பிலி கொடுக்கும்

“இப்போது தமிழ்நாட்டில் வணங்கப்பெறும் பல வீரத் தெய்வங்கள் நடுகல் வழிபாட்டிலிருந்து தோன்றியவை எனலாம்”. “நடுகல் வழிபாடு பிற்காலச் சோழர் காலத்தில் இறந்தோரை அடக்கம் செய்தவிடத்தில் எழுப்பப்பட்ட கோயில் வழிபாடாக மாறியது. இத்தகைய நினைவுச்சின்ன கோயில்களைப் பள்ளிப்படை என்று கூறுவர்”. நடுகல் வழிபாட்டிற்கு பின்னரே இல்லங்களில் முன்னோர் வழிபாடு தோன்றியிருக்கும். ஊரின் புறத்தே காணப்படும் எல்லைத் தெய்வங்களும் நடுகல்லின் வழியாக வந்தது என்று கருத இடமுண்டு. “வரலாற்றின் பல்வேறு கட்டங்களில் ஏற்பட்ட ஆண்-பெண் உறவுகள் அவ்வக் காலத்தில் மக்களுடைய வாழ்க்கையின் எதார்த்த நிலைமைகளிலிருந்து தோன்றவில்லை”.

வழிபாடுகள் மக்களின் மனதில் மகிழ்ச்சியைத் தோற்றுவித்தன. இயற்கையால் ஏற்பட்ட பயமும் ஆபத்தும் அவர்களைவிட்டு நீங்கியதாக எண்ணினர் “ஞாயிற்றின் தோற்றத்தால் புற இருள் நீங்கும். முருகப்பெருமான் சாட்சியால் அக இருளாகிய அஞ்ஞானம் நீங்கும்”. அச்சத்தின் காரணமாக தோன்றிய வழிபாடு பின்னர் அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது.

## இயற்கை வழிபாடு

வேட்டையில் எவ்வகையான விலங்கினை எவ்வாறு வேட்டையாட விரும்பினார்களோ அந்த வகையில் ஓவியங்களை தீட்டியுள்ளார்கள். அவை அவர்களுக்கு வேட்டையாடும் மன வலிமையையும், வெற்றி பெறலாம் என்ற எண்ணத்தையும் கொடுத்தன. இந்த எண்ணமே சமய நம்பிக்கைக்கு அடித்தளமாக அமைந்தன. மனித இம் காடுகளிலும், மலைகளிலும் வாழந்த போது இயற்கையினால் ஏற்பட்ட இன்னல்கள் பல. இடி, மின்னல், புயல் மழை, வெள்ளப்பெருக்கு, வெயில் போன்றவை மனித இனத்திற்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தின. இதை உணர்ந்த மனிதர்கள் தம்மினும் மேலான ஆற்றல் அவற்றிடம் உண்டு என நம்பினர். தமக்குத் துன்பத்தை ஏற்படுத்தும் அவற்றின் முன் பணிந்து வணங்கி நின்றால் அவை துன்பம் செய்யாது என்றும் எண்ணினர். அதன் வாயிலாக இயற்கையை வழிபடும்

முறை தோன்றியது. மலை, காடு, நிலம், நீர், கடல் போன்றவற்றில் தெய்வம் உறைகிறது என்று நம்பினர்

"அண்ங்கொடு நின்றது மலை" (நற். 165:3)

"காடே கடவுள்மேன: புறவே ஒள்ளிழை மகளிரோடு

மன்னர்மேன: ஆறே அவ்வனைத்து" (பதி.13:20-21)

என்பன மலைகளிலும், மரங்களிலும் வாழும் தெய்வத்தை அணங்கு சூர் என்று அழைத்தமையைப் புலப்படுத்தும். இவை பார்ப்பவர் கண்களுக்குத் தெரியாது (அகம்.342) வழியில் செல்வோரைத் துன்புறுத்தும் தெய்வம் தாக்கணங்கு (ஐங்.23,) (அகம்7) என்று அழைக்கப்பட்டது. மரங்களில் பனை, வேம்பு, ஆல், வேங்கை, ஓமை, நள்ளி போல்வன வழிபாட்டிற்குரிய மரங்களாகக் கருதப்பட்டன. இன்றும் மரங்கள் வழிபாட்டிற்குரியனவாக உள்ளமை கருதத்தக்கது. இன்றைக்கும் வேம்பு, அரசு, ஆல் போன்ற மரங்கள் கோவில்களில் தலமரங்கள் என வளர்க்கப்படுவதையும், வழிப்படபடுவதையும் காணலாம். மலியிலும், நீரிலும் உறையும் தெய்வத்தை வரையர மகளிர் நீரர மகளிர் என்று போற்றினர். (அகம்.342) இன்றைக்கும் உயர்ந்த மலைகளில் முனி என்னும் அச்சம் தரும் தெய்வம் இருப்பதாக நம்புவது கருதத்தக்கது. "உருமும் சூரும் இரைதேர் அரவமும்" (குறிஞ்சி 225) இடியும், பாம்பும் போல சூரும் துன்பத்தைத் தரும் தெய்வமாகச் சுட்டிக் காண்பிக்கப் பெற்றுள்ளது. ஞாயிறு, திங்கள், தீச்சுடர் போன்ற இயற்கையின் கூறுகள் தெய்வாகப் போற்றப் பெற்றதைத் தொல்காப்பியம்

"கொடிநிலை கந்தழிவள்ளி என்ற

வடு நீங்கு சிறப்பின் முதலன மூன்றும்

கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" (தொல்.புறம்-85)

என்று கூறப்படுகிறது. இதுவே காலப்போக்கில் இலக்கிய மரபாக உருவெடுத்துக் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் உருவாகின். சிலப்பதிகாரத்தின் தொடக்கம் திங்கள், ஞாயிறு, மாமழை போன்ற இயற்கை ஆற்றல்களின் வழிப்பாட்டுடன் தொடங்குகின்றது. மக்கள் இயற்கையை வழிப்பட்டதனைச் சங்கப்பாடல்கள் மூலம் அறியலாம்.

"தயங்குதிரைப் பெருங்கடலுலகு தொழத்தோன்றி

வயங்கு கதிர் விரிந்த வுருகெழு மண்டிலம்" (அகம் 263:1-2)

"ஞாயிற்றினை வழிபடும் பழக்கம் உலகெங்கும் பரவியிருந்த தொன்மை வழிபாடாகும். (காந்தி 1980) சங்க இலக்கியத்தில் ஞாயிற்றைப் "பகல்கெடு செல்வன்" (நற் 215.) "பருதியஞ்செல்வன்" (அகம்.229) என்று குறிக்கப்பெற்றுள்ளது. சங்ககால மக்கள் தம் வீடுகளில் தெய்வம் உறைவாக நம்பினர். ஆதலால் வீடுகளில் மாலையில் விளக்கு ஏற்றி வழிபட்டனர்.

## இதை நெடுநெல்வாடை

"நெல்லு மலருந் தூஉய்க்கை தொழுது

மல்ல வண மாலை யயர" (நெடு 43-44)

என்று கூறுகின்றது. மக்கள் நெல்லும் மலருந்தூவி தம் கல்லில் உறையும் தெய்வத்தை வழிபட்டுள்ளனர். தெய்வங்களை அமைதிப்படுத்தப் பலியும், படையலும் நடைபெற்றதையும் அறியமுடிகிறது.

"பூவிணர் புகையினர் தொழுவனர் பழிச்சி" (மதுரை 467)

இயற்கையை வணங்கி ஆனந்தமும் அமைதியும் கண்ட தமிழர்கள் வழிபாட்டில் சில பொருள்களைச் சேர்த்துக் கொண்டனர். தமிழர்களின் வழிபாட்டில் விளக்கு, பூ, நெல், திணை ஆகியன

சிறப்பிடம் பெற்றன. (அகப் 232, நெடு.புற-44) அச்சத்தின் காரணமாக தோன்றிய வழிபாடு பின்னர் தங்களுக்கு வேண்டியதை வேண்டியாங்கு பெற வழிபாடு நிகழ்த்துவதாக மாறியுள்ளது. கடவுளை வழிபட்டதால் பிள்ளைபேறு பெற்றதை ஐங்குநுறூறு விளக்குகிறது. (ஐங் 257) கொடியோரைக் கடவுள் ஒறுக்கும்" என்ற நம்பிக்கை தங்களுக்கு மற்றவர்களால் துன்பம் நேரும் போது கடவுளிடம் முறையிடச் செய்துள்ளது. (குறு.87) இக்கட்டான காலங்களில் தெய்வம் நம்மை காக்கும் (நற்.9) என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு இருந்தது.

## ஊர்களில் உறையும் தெய்வங்கள்

மக்கள் குழுவாக இருந்தபொழுது தோன்றிய இயற்கை வழிபாடு அவர்கள் குடும்பமாக மாறியபோது இல்லுறை தெய்வ வழிபாடாயிற்று. தெய்வங்கள் ஊருக்கே பொதுவாக மாறின. இத்தெய்வங்களை ஊர்களில் உறையும் தெய்வங்கள் எனலாம். ஊரின் எல்லைகளில் காவல் தெய்வங்கள் தோன்றின. ஊரில் உள்ள சதுக்கங்களிலும், வீதிகள் கூடும் சந்திகளிலும், எல்லோரும் கூடும் மன்றங்களிலும், ஊருக்குப் பொதுவான தெங்வங்களை வைத்துப் பண்டைய மக்கள் வணங்கினர்.

"சதுக்கமும் அந்தியும் புதுப்பூங் கடம்பும்

மன்றமும் பொதியிலும், கந்துடை நிலையினும்" (திருமுருகா)

ஊரின் நடுவே இருக்கும் மரங்களின் அடிப்பகுதியில் தெய்வம் இருப்பதற்கான அடையாளங்கள் இருக்கும். அதுபோல ஊருக்கு பொதுவான அனைவரும் கூடுவதற்கு ஏற்ற இடத்தில் ஒரு கட்டிடம் இருக்கும். இதில் பலவித வேலைப்பாடுகள் அமைந்திருக்கும். இதுவும் தெய்வம் உறையும் இடமாக அனைவரும் வணங்கியுள்ளனர். "எழுது எழுல் அம்பலம்" (பரி. 18-28) (அகம்.107 பின்னர் அரசு தோற்ற பெற்ற போம் இம்மன்றம் அல்லது அம்பலம் அரசனால் பராமரிக்கப் பெற்றது. அரசன் சிறைப்பிடித்து வந்த மகளிரைப் பொதியில் மெழுக்கு முதலிய பணிகளைச் செய்யுமாறு பணிந்துள்ளான். (அகம்) (பட்டி 246-249) இல்லங்களின் சுவர்களில் பாவை போன்றவை வரைந்து அதை வழிபடும் பழக்கமும் பண்டைய நாளால் இருந்துள்ளது.

"காழ்புனைந்து இயற்றிய வனப்பு அமை நோன்சுவர்ப்

பாவையும் பலி எனப் பெறா அ" (அறம் 369:7-8)

தாம் வாழும் வீட்டின் கதவுகளிலும், வாயில்களிலும் தெய்வம் உறைவதாக மக்கள் நம்பினர். (மதுரை 353-354) (நெடுநல் 86) இவை மட்டுமல்லாது தம் வீடுகளில் உள்ள ஆயுதங்கள், முரசுகள் போன்றவற்றிலும் தெய்வம் இருப்பதாக நம்பினர்.

"நல் இறை மெல்விரல் கூப்பி

இல் உறை கடவுட்டு ஆக்குவதும் பலியே" (அகம் 282:17-18)

என்ற பாடல்வரிகள் இல்லுறைத் தெய்வத்தை வணங்கி, அதற்குப் பலி முதலியன கொடுப்பதனை மகளிர் செய்து வந்ததனை விளக்குகின்றன. பண்டைத் தமிழரின் கற்பனைகளாலும் அச்சத்தாலும் பல கடவுள்களும், வழிபாடுகளும் தோன்றின. இக்கடவுள்களுள் பல மனிதர்களுக்கு நன்மை செய்வனவும், சில தீங்கு செய்வனவாக உள்ளன. தீங்கு செய்யும் தெய்வங்கள் மக்கள் தவறு செய்யும் போது அவர்களைத் திருத்துவதற்காகவும் இக்கடவுள்கள் மக்கள் மனங்களில் தோன்றியிருக்கலாம். அக்கடவுள்களை அணங்கு அல்லது சூர் போன்ற பெயர்களால் பண்டைய மக்கள் அழைத்துள்ளனர். இவ்வணங்கு கற்புடைப் பெண்டிர் மன்னர் முரசு ஊரில் குறிப்பிட்ட இடங்கள் இறந்தோரின் உடல்கள், விதவைகள் மற்றும் பருவமடைந்த பெண்கள் ஆகியவற்றில் இருவருக்கும் என்ற நம்பிக்கை நிலவியது. அணங்கு என்பது அச்சம் தரும் கடவுளாகப் படைக்கப் பெற்றுள்ளது.

"அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்

பிணங்கல் சாலா அச்சம் றான்கே" (தொல்.மெய் 252,)

அணங்கு பேயும் வேண்டிய நேரத்தில் வேண்டிய உருவங்களை எடுக்கவல்லன என்பதை மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது.

"பானாட் கொண்ட கங்குலிடையது

பேயும் அணங்கும் உருவுகொண் டாய்கோந்

கூற்றக் கொல்தேர் கழுதொரு கொட்ப" (மதுரை 631-633)

சங்கப்பாடல்களில் அணங்கு பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. அணங்கை ஊர்களில் உறையும் தெய்வமாக காணலாம்.

## முடிவுரை

சமுதாயச் சடங்குகளே நம்பிக்கையாக மாறுகின்றன. நம்பிக்கையே சமூக முன்னேற்றத்தின் ஊற்றுக்கண்ணாக விளங்குகின்றது நிமித்தங்கள் பார்ப்பதும் குறி கேட்பதும் பண்டைய மக்களின் வழக்கமாக இருந்தன. அரசு தோற்றம் பெற்றபோது போருக்குச் செல்லும்போது நிமித்தங்கள் பார்த்துள்ளனர். நடுகல் வழிபாடே தமிழகத்தில் தோன்றிய முதல் வழிபாடாகும். இவ்வழிபாட்டிலிருந்தே கோயில்களும் ஊர்க்காவல் தெய்வங்களும் தோற்றம் பெற்றன. இன்றைக்குக் கோவில் கட்டும்போது செய்யப்படும் சடங்குகள் பண்டைக்காலத்தில் நடுகல் நடப்பட்டபோது செய்யபட்ட சடங்குகளின் எச்சமாகத் தோன்றுகின்றன. சங்க காலத்தில் எவ்வித சமயமும் காணப்படவில்லை. ஆனால் பல்வேறு வழிபாடுகளும், சடங்குகளும் நம்பிக்கைகளும் இருந்துள்ளன.

## References


Balasubramaniyan, K.V. (2017) Purananooru, New Century Book House, Chennai, India.

Dakshinamurthy, A. (1994) Tamilar Nagarigamum panpadum, Yaal Veliyedu, Chennai, India.

Dakshinamurthy, A. (2017) Kurunthogai, New Century Book House, Chennai, India.

Ilampuranar, (2008) Tholkappiyam, Saradha Pathippagam, Chennai, India.

Jeyabal, M. (2017) Agananooru, New Century Book House, Chennai, India.

Mohan, R. (2017) Mullaipattu, New Century Book House, Chennai, India.

Subramaniyan, N. (1986) Sangakala Valviyal, New Century Book House, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License